# பணி நிறைவு வாழ்த்து!

பெருமைகொள் பொருணைநதி சீராளன்,
அருமைமிகு காவிரியின் படுகையாகும்,
தருமமிகு பாபநாசம் தன்னில் பிறந்தெழுந்து,
உருவாக்கும் கல்விதனைபூண்டியில் கற்று,

பெருமையோடு எங்கள் கல்லூரியாகிய,
புஷ்பம் கல்லூரி கொண்ட கல்வியது,
புவிமீதில் வாழ்விடமாய் சுங்கம் சேர,
படிக்கட்டு வழியெனப் பார்க்கையில்,



முடிகொண்ட மன்னராக முகிழ்ந்திட,
அடிதொட்டு படித்த அன்பால் நிறைந்து,
முடிகொண்டு கவிஞனாய் முகிழ்வதினாலும்
**நடராஜன்** தன்னை நினைவில் கொண்டு,

நன்னியசீர் யாவும் கொள்ள அன்புடன்,
பணிநிறைவு நாளில் வாழ்த்துகின்றேன்!



அடுத்தெங்கள் காவியின் பெருமைசூடும்,
தொடுத்த ஊர் திருக்குவளை பிறந்து,
அடுத்து சென்னையில் வாழ்வைச் சூடும்,
சுங்கத்துறை பணியுமாகி, வருவாய் குடியிருப்பில்,

சேர்ந்திருந்த காலமதில், ஊர் பெருமை பேசி உவகை
கொள்ளும் காலமும் ஆக, **கனக. தில்லைநாயகன்,**
இன்று காண்பதுவோ பணி நிறைவு! எல்லையில்
மகிழ்வினோடும் இனியும் வாழ்ந்திருக்க வாழ்த்து!

அடுத்து இன்று பணி நிறைவில்
தன்னைத் தொடுத்துக் கொள்ளும்
அன்பர் **டி. எம். ஒய். குமார்** அவரோ
முறுவலை முகத்தில் ஏந்தும்,

முனைப்பான பணியின் கேள்வன்!
அன்னாரும் வரும் நாளில் அகமகிழ்து
வாழ்ந்திடத் தான் வாழ்த்துவேனே!
அனைவருக்கும் இனிய பணி நிறைவு வாழ்த்து!



**31-07-2025,**

- அன்புடன்,
**கு.ப. அசோகன்,**
**(மேனாள் மதிப்பீட்டு அதிகாரி)**